


Our Chezhumai is given to the Small Groups in bilingual format (English and Tamil)

எங்களது செழுமை மாத இதழ் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் சிறுகுழுக்களுக்கு கொடுக்கப்படுகிறது



## Few Best Practices

1. Give good spacing between trees to have good growth
2. Attend all the Node meetings with out fail
3. Plant trees for short & long time income and also plant good timber & fruit bearing trees
4. Maintain the groves by following the natural method
5. Practice intercrops regularly
6. Place a name board for every grove
7. Follow the best practices learnt from  Node
8. Do all the activities after good planing and with full zeal

## சிறந்த பயிற்சி முறைகள்

1. மரங்கள் நல்ல முறையில் வளர்வதற்கு, மரங்களை நல்ல இடைவெளி விட்டு நடவு செய்வது
2. கணுகூட்டங்களில் தவறாமல் கலந்து கொள்வது
3. குறுகிய காலம் மற்றும் நீண்ட காலத்திற்கான வருமானம் பெற பலவிதமான மரங்கள், பழவகைகள் மற்றும் கட்டடதச்சு வேலைக்கான மரங்களை நடவு செய்வது
4. தோட்டத்தை இயற்கை முறையில் பராமரித்து
5. தவறாமல் ஊடுபயிர் செய்வது
6. தோப்புகளுக்கு பெயர் பலகை பொருத்துவது
7. சிறுகுழுக்கள் கூட்டத்தில் பேசப்பட்ட நல்ல செயல்முறைகளை செயல்படுத்துவது..
8. எல்லா காரியத்தையும் நல்ல திட்டமிட்டு ஆர்வத்தோடு செய்வது

## Ramakrishnan Small Group of Vellore Center

We the members of Ramakrishnan Small Group from Kalavaiputhur Village participate regularly in TIST Node meetings and follow the learnt best practices. Accordingly to April 2011 quantification we have 2,630 teak trees in our Annamalai grove. All these trees are one year old. We have planted all these trees with good spacing of 10x10 feet to give good air circulation for the trees below the ground. Since we follow the natural way in tree planting activity, tree maintenance expense is very less. We are planning to setup a drip irrigation for our trees.

We received free seedlings from TIST Program and we are now eligible to get TIST voucher payment for all our live trees from next month. This payment will be our additional income, we are happy about it.

## வேலூர் மையத்தில் ராமகிருஷ்ணன் சிறுகுழு

வேலூர் மையத்தில் ராமகிருஷ்ணன் சிறுகுழுவாகிய நாங்கள் கலவைபுதூர் கிராமத்தில் TISTன் கணுக்கூட்டத்தில் தவறாமல் கலந்த கொண்டு TIST திட்டத்தின் சிறந்து செயல் திட்டங்களை கடைப்பிடித்து வருகின்றோம். அண்ணாமலை என்ற தோட்டத்தில் ஏப்ரல் 2011 கணக்கெடுப்பின்படி மொத்தம் 2630 தேக்கு மரங்கள் உள்ளன. இது ஒரு வருட மரக்கன்றுகளாகும். நாங்கள 10x10 என்ற இடைவெளியில் நல்ல காற்றோட்டமுள்ள முறையில் தேக்கு மரங்களை வைத்து நல்ல முறையில் பராமரித்து வருகின்றோம். மேலும் மரங்களுக்கு இயற்கை முறையில் விவசாயம் செய்வதால் செலவு குறைவாக உள்ளுத. நாங்கள் மரக்கன்றுகளுக்கு சொட்ட நீர் பாசனத்தை மேற்கொள்ளவுள்ளோம்.

நாங்கள் TIST திட்டத்திலிருந்து இலவச மரக்கன்றுகளை வாங்கி நடவு செய்துள்ளோம் நாங்கள் அடுத்த மாதம் TIST திட்டத்திலிருந்து ஊக்கத்தொகை பெற தகுதி பெற்றுள்ளோம். இதனால் எங்களுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும் மகிழ்ச்சியாக இருக்கின்றோம்.



Member of Ramakrishnan Small Group in their teak tree grove /
ராமகிருஷ்ணன் சிறுகுழு உறுப்பினர் அவர்களது தேக்கு தோப்பில்

## Tiruvannamalai District

Rajagopal Small Group of Thurinjapuram Village in Tiruvannamalai District have planted trees through TIST Program and maintaining it in a special way. All these trees are giving a beautiful look to the grove. The members of this group have cultivated kassava (maravalli kilangu) as intercrops in between the trees. The trees grow in good condition by sharing the care given for the intercrops. Members get about Rs.150,000 in a year from their 3 acre land through yield from their intercrops. They also participate in all TIST Node meetings without fail. The members say that "they are thankful to TIST because TIST encouragement has developed their group. Farmers like us who give good air for the country by planting trees are greatly encouraged by TIST to practice intercrops for additional income and TIST voucher payment will definitely be a good support."

## திருவண்ணமாலை மாவட்டம்

திருவண்ணாமலை மாவட்டம, இராஜகோபால் சிறுகுழு துரிஞ்சாபுரம் கிராமத்தில் டி.ஐ.எஸ்.டி திட்டத்தின் மூலம் மரக்கன்றுகளை சிறப்பான முறையில் வளர்த்து வருகின்றனர். இம்மரக்கன்றுகள் அனைத்தும் அழகிய தோப்பாக காட்சி அளிக்கின்றது. இந்த தோப்புகளுக்கு இடையே மரவள்ளி கிழங்கை ஊடுபயிராக செய்கின்றனர். ஊடுபயிர்களை பராமரிக்கும் செலவிலேயே மரமும் நல்ல ஊட்டமாக வளர்வதால் இத்தோட்டம் அமைந்துள்ள 3 ஏக்கரில் வருடந்தோரும் சுமார் 1,50,000 வரை வருமானம் ஈட்டுகின்றனர். மேலும் இவர்கள் டி.ஐ.எஸ்.டி கணுக்கூட்டத்தில் தவறாமல் கலந்த கொள்கின்றனர். இவர்கள் கூறுகையில் நாங்கள் டி.ஐ.எஸ்.டிக்கு நன்றி கூறுகின்றோம் ஏன் என்றால் டி.ஐ.எஸ்.டி தொடர்ந்து தரும் ஊக்கம் தான் எங்கள் குழு வளர்ச்சிக்கு காரணம். எங்களை போல் நாட்டிற்கு நல்ல காற்றை தர மரம் வளர்ப்பதுடன் ஊடு பயிர் செய்து உங்கள் வருமானங்களை பெருக்கி கொள்ளுங்கள் அப்பொழுது தான் நம்மை போன்ற விவசாயிகளின் வாழ்கை தரம் உயரும் என்றும் டி.ஐ.எஸ்.டி தரும் உதவி தொகை தங்களுக்கு என்றும் உதவியாக இருக்கும் என்று கூறி அன்போடு விடைபெற்றனர்.





Member of Rajagopal Small Group in their tree grove /
இருாஜகோபால் சிறுகுழு உறுப்பினர்கள அவர்களது தோபபில்

## Gandhi Small Group of Bidagam Village, Villupuram District

Best practices of Gandhi Small Group of Ulundur-Villu Center, Villupuram District . Farmers of this small group, Annadurai, Manoharan and Murugan have planted trees in their land and maintaining the trees in the natural way. They have cultivated short time crops like chilly and ladiesfinger as intercrops in their guava tree grove and getting good yield from the intercrops. They have installed drip irrigation for their groves and so they will not have water shortage problem during summer, they will be practicing intercrops regularly. The members of this group participate in all TIST Node and Trianing Program with full zeal. This group is about to start getting TIST voucher for all their live trees.

## விழுப்புரம் மாவட்டம், காந்தி சிறுகுழு, பிடாகம்

விழுப்புரம் மாவட்டத்தில் உளுந்தூர்பேட்டை மையத்தில் காந்தி சிறுகுழுவின் சிறப்பான செயல்பாடுகள். இச்சிறுகுழுவில் உள்ளவிவசாயிகளான திரு.அண்ணாதுரை, திரு.மனோகரன், திரு.முருகன் ஆகிய மூவரும் அவர்களுடைய தோட்டத்தில் மரக்கன்றுகளை இயற்கையான விவசாய முறையில் வளர்த்து வருகின்றனர். இவர்களின் தோட்டத்தில் கொய்யா மரக்கன்றுகளின் இடையில் மிளகாய் செடி மற்றும் வெண்டை போன்ற குறுகிய கால ஊடு பயிர் வகைகளை விவசாயம் செய்து கூடுதல் வருமானத்தை ஈட்டி வருகின்றனர். இவர்களின் தோட்டத்திலுள்ள மரக்கன்றுகளின் இடையில் சொட்டு நீர் பாசனம் செய்திருப்பதால் கோடைகாலத்தில் நீர் பற்றாக்குறையின்றி தொடர்ச்சியாக குறுகிய கால ஊடு பயிர்களை செய்து வருகின்றனர். இவர்கள் TIST -ன் அனைத்த பயிர்ச்சி முகாம்கள் மற்றும் கணுக்கூட்டங்களிலும் ஆர்வத்தடன் கலந்த கொள்கின்றனர். TIST- ன் ஊக்க தொகையைப்பெரும் தருவாயில் உள்ளனர்.



## Raja Small Group of Placepalayam2 Center

The members of this small group have 4,710 trees in their groves. They are sharing some good information for all:

- Jeevamurtham can be used as manure for the trees. Young trees grow very fast due to Jeevamurtham. This stops tree casualty from disease. Procedure to prepare Jeevamurtham - Cowdung - 10 kg, cowurine - 10 lt, jaggery - 2 kg, greengram flour - 2 kg, water 180 lt. Mix all together and use it.
- We have different tree species in our grove like, mahogany, vengai, kumil, malaivembu.
- Several farmers visit our tree groves to see our best practices and they also do the same in their grove.
- We have placed a name plate for every tree species for the farmers to understand easily
- This month, we will be getting TIST voucher payments for all our live trees, this will be an additional income for us

## பிளேஸ்பாளையம்2 மையத்தில் ராஜா சிறு குழு

இச்சிறுகுழுவில் உள்ள உறுப்பினர்கள அவர்களது தோட்டத்தில் 4710 மரக்கன்றுகள் வைத்துள்ளனர். இச்சிறு குழு விவசாயி சில தகவல்கள் கூறியுள்ளனர்.

- கன்றுகளுக்கு உரமாக ஜிவாமர்தம் இட வேண்டும். இதை இடுவதால் கன்றுகள் வேகமாக வளர்கிறது. பூச்சிதாக்குவதால் மரங்கள் பட்டுபோவதை இந்த ஜிவாமர்தம் தடுக்கின்றது. ஜிவாமிர்தம் செய்முறை – பசு சானம் – 10கி, கோமியம் –10லி, வெல்லம் – 2கி, பச்சைபயிறு (மாவு) – 2கி, தண்ணீர் – 180லி. அனைத்தையும் இடது புறமாக ஒன்று சேர்த்து கலக்க வேண்டும்.
- எங்களுடைய தோப்பில் ஒரு மரத்திற்கு ஒரு மரம் வேவ்வேறு வகையை சார்ந்தது, மகாகனி, வேங்கை, குமிழ்தேக்கு, மலைவேம்பு என்று வைத்துள்ளோம்
- எங்களுடைய தோப்பிற்கு விவசாயிகள் வந்த பார்வையிட்டு அதுபோல் மரம் வளர்ப்பை செய்கின்றனர்.
- விவசாயிகள் புரிந்துகொள்ளும் வைகையில் மரங்களின் பெயர் பளகை உரிய மரத்தில் வைத்தள்ளோம்
- TIST ன் ஊக்கத்தொகை எங்களுக்கு இம் மாதம் கிடைக்க இருக்கிறது இது எங்களுக்கு கூடுதல் வருமானமாக இருக்கிறது.






## டிஜஎஸ்டி நிகழ்வில் பங்குகொள்ள அங்கத்தினர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய தகுதிகள்

1. ஒவ்வொரு சிறு குழுவிலும் குறைந்தது மூன்று வெவ்வேறு குடும்பங்களை சார்ந்த 6 முதல் 12 உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு சிறு குழுவும் குறைந்தது 1,000 உயிர் மரங்களை, டிஜஎஸ்டியில் சேர்ந்த ஒரு வருடத்திற்குள் வளர்க்க வேண்டும்.

3. டிஜஎஸ்டியில் சேர்ந்து ஐந்து வருடங்களுக்குள் குறைந்தது 5,000 உயிர் மரங்களை கொண்டிருக்க வேண்டும்.

4. உங்கள் சிறு குழு ஒவ்வொரு வருடமும் 20, வருடங்களுக்கு அழிந்த அல்ல விழுந்தபோன மரங்களின் இடத்தில் புதிய மரங்களை வளர்க்க வேண்டும.,

5. எல்லா சிறு குழுவும் கீரீன்ஹவுஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்.

6. டிஜஎஸ்டி ஒரு வருடத்திற்கு ஒரு உயிர் மரத்திற்கு ரூ.1.50 (US $0.03) கொடுக்கும் (கீரீன் ஹவுஸ் உடன்படிக்கையை படித்து மேலும் விவரங்களை தெரிந்து கொள்ளுங்கள்).

7. புதர்கள் அல்லது 4மீ உயரத்திற்கு குறைவாக வளரும் இனவகை மரங்களை டிஜஎஸ்டி மரமாக கணக்கில் எடுத்து கொள்ளாது.

8. 2மீஇடைவெளிக்கும் குறைவாக பயிரிடப்படும் மரங்கள் கணக்கில் எடுக்க இயலாது.

9. 10 வருடங்கள் அதற்கு மேல் வளர்ந்த மரங்களையே டிஜஎஸ்டி அறுவடை செய்ய அனுமதியளிக்கும். எனினும் ஒரு வருடத்திற்கு 5 சதவிகிதத்திற்கு மேலாக அறுவடை செய்ய கூடாது.

10. ஒவ்வொரு சிறு குழுவும் 33 சதவிகிதத்திற்கும் குறைவாகவே குறுகியகால மரங்கள் இருக்கவேண்டும். (உ.த. தைலமரம்) தற்பொழுதிய குழுக்கள் 33 சதவிகிதத்திற்கு மேல் குறுகியகால சுழற்சி முறை மரங்களை வளர்ப்பின் அவர்கள் 5 வருடம் (2012) வரை கூடுதலான மரங்களை வளர்க்க காலம் கொடுக்கப்படும். அல்லது இந்த தகுதியடையும் வரை மரங்களை அறுவடை செய்ய இயலாது.

11. டிஜஎஸ்டி சிறு குழுக்கள் ஆண்டிற்கு ஒரு முறை கட்டாயமாக ஆய்வாளர்களை அழைத்து தங்கள் தோப்பினை ஆய்வு செய்து கொள்ள வேண்டும். இவர்கள் மற்ற சிறு குழுவினரோடு சேர்ந்து ஆய்வின் பொழுது, ஆய்வாளர்களுக்கு உணவும், தங்கும் இடமும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

12. சிறு குழு அங்கத்தினர் ஒன்றாக கூடி தங்களின் பயிற்சி முறைகளையும். ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாரமும் சந்திக்க இயலாவிட்டால் மாதம் ஒரு முறையாவது சந்திக்க வேண்டும்.

13. சிறு குழு அங்கத்தினர் தாங்கள் மரங்களை வளர்க்கும் நிலத்தின் உரிமை சான்றினை அளிக்க வேண்டும்.

14. குழுவின் அங்கத்தினர்கள் டிஜஎஸ்டி பயிற்சியில் பங்கு கொண்டு மற்ற குழுக்களுடன் தங்களின் சிறப்பு பயிற்சி முறைகளை பகிர்ந்து கொள்ளவேண்டும்.

15. உங்கள் சிறு குழு உள்ள பகுதியில் மற்ற சிறு குழுக்களும் நடந்து செல்லும் தூரத்தில் அமைந்திருக்க வேண்டும். ஒரு வருடத்திற்குள் 100,000 மரங்களும் 5 வருடங்களுக்குள் 300,000 மரங்கள் வளர்க்ளும் தகுதியும் கொண்டிருக்க வேண்டும்.